# சிங்கப்பூர் சேமிப்புப் பத்திரங்கள் (SSB) குறித்த உண்மைத்தாள்

### அரசாங்கம் ஏன் சேமிப்புப் பத்திரங்களை அறிமுகப்படுத்துகிறது?

- தனிநபர்கள் நீண்ட-காலம் சேமிப்பதற்கு ஓர் பாதுகாப்பான மற்றும் தேவைக்கேற்ற இணக்கமான வழியை வழங்குவதற்கு.

### நிதிப்பொருள் குறித்த தகவல்கள்

| இனம் | விவரங்கள் |
|---|---|
| தகுதி | • 18 மற்றும் அதற்கு அதிகமான வயதுடைய தனிநபர்கள் |
| வழங்குபவர் | • சிங்கப்பூர் அரசாங்கம் |
| காலவரை | • 10 ஆண்டுகள் |
| வட்டி | • 6 மாதத்திற்கு ஒருமுறை வழங்கப்படும்<br>• முந்தைய மாதத்தில் சிங்கப்பூர் அரசாங்கக் கடன்பத்திரங்கள் (SGS) ஈட்டுகின்ற வட்டியின் அடிப்படையில் வட்டி விகிதங்கள் நிர்ணயிக்கப்படும்; மேலும் இந்த வட்டி விகிதம் ஒவ்வொரு வெளியீட்டின் போதும் மாறாமல் இருக்கும். |
| வெளியீடு | • மாதந்தோறும் |
| தொகைமீட்பு | • மாதந்தோறும், அபராதமின்றி<br>• அசல் மற்றும் ஏதேனும் வட்டியும் சேர்த்து வழங்கப்படும்<br>• $500 மடங்குகளில் |
| முதலீட்டுத் தொகை | • குறைந்தபட்சம் $500, மற்றும் அதைத் தொடர்ந்து $500 மடங்குகளில்<br>• ஆக மொத்தம் $200,000 வரை (1 பிப்ரவரி 2019-இல் இருந்து) |
| மற்றவர் பெயருக்கு மாற்றம் செய்ய முடியாது | • முதலீட்டாளர்கள் தங்களுடைய பத்திரங்களின் உரிமைத்துவத்தை மற்றொரு நபருக்கு மாற்றம் செய்ய முடியாது |
| வரி | • வட்டி வருமானத்திற்கு வரி விலக்கு உண்டு |

## முக்கிய சிறப்பம்சங்கள்

**பாதுகாப்பானவை**
சிங்கப்பூர் அரசாங்கத்தின் முழு உத்திரவாதத்தைப் பெற்றுள்ளது. உங்கள் முதலீட்டுத் தொகைக்கு எந்தவித இழப்புமின்றி உங்கள் அசல் தொகை முழுவதையும் நீங்கள் திரும்பப் பெற முடியும்.

**நீண்ட-கால முதலீடு**
10 ஆண்டுகாலம் வரை முதலீடு செய்து, காலப்போக்கில் “உயர்கின்ற” அல்லது அதிகரிக்கின்ற வட்டியை ஈட்டுங்கள். நீங்கள் அதிக காலத்திற்குச் சேமித்தால், அதிக வட்டியைப் பெறுவீர்கள்.

**தேவைக்கேற்ற தொகைமீட்புக் காலம்**
எந்தவித அபராதமுமின்றி ஒரு மாதத்திற்குள் உங்கள் பணத்தைத் திரும்பப் பெறுங்கள். உங்களுடைய முதலீட்டுக் காலம் குறித்து நீங்கள் தொடக்கத்திலேயெயே முடிவெடுக்கத் தேவையில்லை.

### நீங்கள் எவ்வாறு நன்மை பெற முடியும்?

- **ஓய்வுகாலத்திற்காக சேமித்தல்** - உங்களுடைய சேமிப்பின் மதிப்பைப் பேணுவதற்கான ஒரு பாதுகாப்பான மற்றும் தேவைக்கேற்ற இணக்கமான வழி.
- **“அவசரகால சேமிப்பு நிதி”** - உயர்கின்ற வட்டி வருவாயை உங்கள் சேமிப்பின் மூலம் ஈட்டுங்கள், மேலும் உங்களுக்கு அவசியம் தேவைப்படும் வேளையில் உங்கள் பணத்தை விரைவாகத் திரும்பப் பெறுங்கள்.
- **மாறுபட்ட தன்மை கொண்ட முதலீடுகள்** - உங்கள் முதலீடுகளினால் ஏற்படும் இடர்களைக் குறைக்க, பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாறுபட்ட தன்மை கொண்ட முதலீடுகளைத் தேர்ந்தெடுங்கள். உங்கள் முதலீட்டின் ஒரு பகுதியை சேமிப்புப் பத்திரங்களுக்கு ஒதுக்குவதன் மூலம் இது சாத்தியமாகும்.

### நான் எவ்வளவு இலாபத்தைப் பெற முடியும்?

- உங்களுடைய சேமிப்புப் பத்திரத்தை நீங்கள் முழுமையாக 10 ஆண்டுகளுக்கு வைத்திருந்தால், உங்கள் முதலீட்டால் ஒரு வருடத்திற்குச் சராசரியாக கிடைக்கும் இலாபமானது, நீங்கள் முதலீடு செய்த அதே காலத்தில் ஒரு 10-வருட SGS-ஐ வைத்திருந்தால் கிடைக்கக்கூடிய இலாபத்திற்கு

இணையாக இருக்கும். கடந்த 10 ஆண்டுகளில், 10-வருட SGS ஆனது பொதுவாக 2% முதல் 3% வரையிலான இலாபத்தை ஈட்டியுள்ளது.

- உங்களுடைய சேமிப்புப் பத்திரத்தை நீங்கள் முன்கூட்டியே மீட்க முடிவுசெய்தால், நீங்கள் குறைவான இலாபத்தையே பெறுவீர்கள். பொதுவாக, குறிப்பிட்ட ஆண்டுகளுக்குத் தனது சேமிப்புப் பத்திரத்தை வைத்திருக்கும் ஒரு முதலீட்டாளர், அதே காலக்கட்டத்திற்குண்டான SGS-இன் இலாபத்திற்கு இணையான இலாபத்தைப் பெறுவார்.

## உயர்கின்ற வட்டி விகிதம்: இது எவ்வாறு செயல்படுகிறது

ஜூன் 2015 SGS விகிதங்களின் அடிப்படையில் வட்டியை வழங்குகின்ற $1,000 சேமிப்புப் பத்திரங்களை நீங்கள் ஜூலை 2015-இல் வாங்குகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். (இந்த மதிப்புகள், விளக்கும் நோக்கங்களுக்காக மட்டுமேயாகும்.)




- முதல் ஆண்டில், நீங்கள் $9 வட்டியை ஈட்டுவீர்கள். இது உங்களின் 1 ஆண்டு முதலீட்டுக் காலத்திற்கு கிடைத்த 0.9% வட்டி வருவாயாகும். இரண்டாவது ஆண்டில், நீங்கள் $15 வட்டியைப் பெறுவீர்கள். 2 ஆண்டுகாலத்தில், நீங்கள் சராசரியாக ஒவ்வொரு ஆண்டுக்கும் சுமார் 1.2% வட்டி வருவாயை ஈட்டுவீர்கள்.

- நீங்கள் பெறும் வட்டித் தொகை காலப்போக்கில் அதிகரிக்கும். பத்தாவது ஆண்டில், நீங்கள் $33 வட்டியைப் பெறுவீர்கள். முதல் ஆண்டில் இருந்து பத்தாவது ஆண்டு வரை நீங்கள் பெறும் வட்டியின் அடிப்படையில், ஒரு வருடத்திற்கான உங்களுடைய சராசரி வட்டி வருவாய் 2.4% ஆகும்.

## சேமிப்புப் பத்திரங்களுக்காக ரொக்கத்தைப் பயன்படுத்தி விண்ணப்பித்தல் மற்றும் தொகைமீட்டல்

| நீங்கள் விண்ணப்பம் செய்வதற்கு முன்னர் | ஏடிஎம்'கள் மற்றும் இணைய வங்கியியல் (இன்டர்நெட் பேங்கிங்) வாயிலாக விண்ணப்பம் மற்றும் தொகை மீட்டல் | அடுத்து என்ன நிகழும்? |
|---|---|---|
| தயவுசெய்து கீழ்க்கண்டவற்றைத் தயாராக வைத்துக் கொள்ளுங்கள்<br>✓ பங்கேற்கின்ற ஏதேனும் ஒரு வங்கியில் ஒரு வங்கிக் கணக்கு (தற்சமயம் DBS/POSB, OCBC அல்லது UOB)<br>✓ நேரடி வரவு வைத்தல் சேவை (DCS) செயற்படுத்தப்பட்ட ஓர் தனிநபர் CDP கடன்பத்திரங்கள் கணக்கு | DBS/POSB, OCBC அல்லது UOB ஏடிஎம்'கள் அல்லது DBS/POSB இணைய வங்கியியல். நீங்கள் வங்கிக்கு நேரில் சென்று விண்ணப்பிக்கவோ அல்லது தொகையைத் திரும்பப் பெறவோ முடியாது.<br><br>விண்ணப்பிக்கும் வேளையில், உங்கள் ஏடிஎம் அட்டையுடன் இணைந்துள்ள வங்கிக் கணக்கில் இருந்து தொகை கழித்தல் செய்யப்படும். இதற்கு SRS மற்றும் மசேநி நிதிகள் தகுதிபெறவில்லை.<br><br>ஒவ்வொரு விண்ணப்பம் மற்றும் தொகைமீட்டல் வேண்டுகோளுக்கும், திரும்ப அளிக்கப்படாத ஓர் $2 பரிவர்த்தனைக் கட்டணம் வங்கிகளால் விதிக்கப்படும். | தகுதிபெறும் விண்ணப்பதாரர்களுக்கு CDP மூலம் அஞ்சல் வழியாக தகவல் தெரிவிக்கப்படும். வட்டியானது, உங்களுடைய CDP கடன்பத்திரங்கள் கணக்குடன் இணைக்கப்பட்டிருக்கும் வங்கிக் கணக்கிற்குத் தானாக வரவு வைக்கப்படும்.<br><br>தொகை மீட்டல்: உங்களுடைய தொகை மீட்பு வேண்டுகோள்கள் செயல்படுத்தப்பட்ட பிறகு CDP உங்களுக்கு அஞ்சல் வாயிலாகத் தகவல் தெரிவிக்கும்.<br><br>வரவுத்தொகையானது, உங்களுடைய CDP கணக்குடன் இணைக்கப்பட்டிருக்கும் உங்கள் வங்கிக் கணக்கிற்கு, அதைத் தொடர்ந்து வரும் மாதத்தின் 2வது வேலை நாளுக்குள் வரவு வைக்கப்படும். |

## உங்களுடைய CDP கடன் பத்திரங்கள் கணக்கு மற்றும் DCS -ஐத் தொடங்குதல்

- நீங்கள் ரொக்கத்தைப் பயன்படுத்தி சேமிப்புப் பத்திரங்களுக்காக விண்ணப்பிக்கிறீர்கள் என்றால், உங்களிடம் DCS செயற்படுத்தப்பட்ட ஒரு தனிநபர் CDP கடன் பத்திரங்கள் கணக்கு இருக்க வேண்டியது அவசியமாகும்.
- நீங்கள் விண்ணப்பப் படிவத்தை இணையம் வாயிலாகப் பதிவிறக்கம் செய்து, நிறைவுசெய்து, பிறகு நிறைவுசெய்த விண்ணப்பப் படிவத்தை CDP-க்கு அஞ்சலில் அனுப்பி வைப்பதன் மூலம் உங்கள் CDP கணக்கைத் தொடங்கலாம். மேலதிகத் தகவல்களுக்கு, http://www.sgx.com/cdp/faq என்ற இணையப்பக்கத்தைப் பார்வையிடவும் அல்லது நீங்கள் CDP வாடிக்கையாளர் சேவை மையத்தை (9 நார்த் புவோனா விஸ்டா ட்ரைவ், #01-19/20 தி மெட்ரோபோலிஸ், சிங்கப்பூர் 138588) அல்லது ஏதேனும் SGX கடன் பத்திரத் தரகரை நேரில் சென்று காணலாம்.
- உங்களிடம் ஏற்கனவே ஒரு CDP கணக்கு உள்ளது எனில், DCS ஆன்லைனுக்கு விண்ணப்பம் செய்ய நீங்கள் CDP இணையச் சேவையைப் பயன்படுத்தலாம் அல்லது விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து, நிறைவுசெய்து, பிறகு CDP-க்கு அஞ்சலில் அனுப்பலாம். உங்களுடைய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டுடன் நீங்கள் CDP வாடிக்கையாளர் சேவை மையத்தை வேண்டுமானாலும் அணுகலாம்.

**[புதிது! 1 பிப்ரவரி 2019 முதல் SRS நிதிகளைப் பயன்படுத்தி விண்ணப்பங்களுக்காகத் தொடங்கிடுங்கள்]**

**துணை ஓய்வூதியத் திட்ட (SRS) நிதிகளைப் பயன்படுத்தி சேமிப்புப் பத்திரங்களுக்காக விண்ணப்பம் செய்யுங்கள் அல்லது தொகைமீட்பு செய்யுங்கள்**

| நீங்கள் விண்ணப்பம் செய்வதற்கு முன்னர் | இணைய வங்கியியல் (இன்டர்நெட் பேங்கிங்) வாயிலாக விண்ணப்பம் செய்தல் | அடுத்து என்ன நிகழும்? |
|---|---|---|
| தயவுசெய்து கீழ்க்கண்டவற்றைத் தயாராக வைத்துக் கொள்ளுங்கள்<br>✓ SRS ஆப்பரேட்டர்களில் (தற்சமயம் DBS/POSB, OCBC அல்லது UOB) ஒன்றுடன் ஒரு SRS கணக்கு<br>✓ உங்கள் SRS கணக்கில் போதுமான தொகை.<br>✓ நீங்கள் விண்ணப்பிக்கின்ற தொகை மற்றும் S$2 பரிவர்த்தனைக் கட்டணம் இதில் உள்ளடங்கும் | உங்கள் SRS ஆப்பரேட்டரின் (எ.கா., DBS/POSB, OCBC அல்லது UOB) இணைய வங்கியியல் இணையவாசல் வாயிலாக விண்ணப்பம் செய்யுங்கள். நீங்கள் வங்கிக்கு நேரில் சென்று சேமிப்புப் பத்திரங்களுக்காக விண்ணப்பிக்கவோ அல்லது தொகையைத் திரும்பப் பெறவோ முடியாது என்பதைக் குறித்துக்கொள்ளுங்கள்.<br><br>விண்ணப்பிக்கும் வேளையில், உங்கள் சேமிப்புப் பத்திரங்களின் கொள்முதலுக்காக பயன்படுத்தப்படும் SRS நிதிகளை வங்கிகள் பூட்டிவிடும் அல்லது ஒதுக்கிவைத்துவிடும்.<br><br>ஒவ்வொரு விண்ணப்பம் மற்றும் தொகைமீட்டல் வேண்டுகோளுக்காகவும், திரும்ப அளிக்கப்படாத ஓர் $2 பரிவர்த்தனைக் கட்டணம் வங்கிகளால் விதிக்கப்படும் என்பதைக் குறித்துக்கொள்ளுங்கள். | தகுதிபெறும் விண்ணப்பதாரர்களுக்கு அஞ்சல் வழியாக வங்கிகள் தகவல் தெரிவிக்கும். வட்டியானது, 6 மாதங்களுக்கு ஒருமுறை உங்களுடைய SRS கணக்கிற்குத் தானாக வரவு வைக்கப்படும்.<br><br>தொகை மீட்புக்கு, உங்களுடைய தொகை மீட்பு வேண்டுகோள்கள் செயல்படுத்தப்பட்ட பிறகு வங்கிகள் உங்களுக்கு அஞ்சல் வாயிலாகத் தகவல் தெரிவிக்கும்.<br><br>வரவுத்தொகையானது, உங்களுடைய SRS கணக்கிற்கு, அதைத் தொடர்ந்து வரும் மாதத்தின் 2வது வேலை நாளுக்குள் வரவு வைக்கப்படும். |

மசேநி நிதிகள் தற்சமயம் சேமிப்புப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களுக்குத் தகுதிபெறவில்லை.